**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**விசேட அதிரடிப்படை**

**(இலங்கை பொலிஸ்)**

# விலைமனுக்கோரல் (IFB)

## விசேட அதிரடிப்படை பிரிவிற்கான ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் விளையாட்டு காலணிகள் கொள்முதல்

1. விசேட அதிரடிப்படை பிரிவினருக்காக அமைச்சின் பெறுகை குழுவின் தலைவரினால் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்தத்தின் பெயர் | மனு ஆவணக் கட்டணம் | சமர்ப்பிக்கப்படும் மனுவின் செல்லுபடியாகும் காலம் | மனுப் பிணையின் பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலம் | மனு ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதி மற்றும் நேரம் | முன் மனுக்கூட்டத்தின் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **Procurement of Weapons for the Special Task Force**<br>**IFB No. PS/03/PB/08/04/26** | ரூ.44,000.00 | 2026.05.13 முதல் 2026.08.12 வரையாகும் | 2026.05.13 முதல் 2026.09.09 வரை செல்லுபடியாகும் ரூ.4,602,000.00 பெறுமதியான பிணை | 2026.05.13 ஆம் திகதி 1400 மணி | 2026.04.30 ஆம் திகதி 1030 மணி |
| **Procurement of Ammunitions for the Special Task Force**<br>**IFB No. PS/03/PB/08/07/26** | ரூ.14,000.00 | 2026.05.14 முதல் 2026.08.13 வரையாகும் | 2026.05.14 முதல் 2026.09.10 வரை செல்லுபடியாகும் ரூ.906,000.00 பெறுமதியான பிணை | 2026.05.14 ஆம் திகதி 1400 மணி | 2026.04.30 ஆம் திகதி 1100 மணி |
| **Procurement of 7600 Nos Sport Shoes for the Special Task Force**<br>**IFB No. PS/03/PB/08/05/26** | ரூ.14,000.00 | 2026.05.15 முதல் 2026.08.14 வரையாகும் | 2026.05.15 முதல் 2026.09.11 வரை செல்லுபடியாகும் ரூ.912,000.00 பெறுமதியான பிணை | 2026.05.15 ஆம் திகதி 1400 மணி | 2026.04.30 ஆம் திகதி 1130 மணி |

02. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறுகின்றது (NCB). (ஒற்றை நிலை ஒற்றை உறை ஏல நடைமுறை)

03. இதற்காக ஆர்வமுள்ள தகுதி பெற்ற மனுதாரர்கள் மேலதிக விபரங்களை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலைமை கணக்காளர்களிடம் **தொ.பேசி.இல : 0112 887396** / மின்னஞ்சல் : **mops.procurementunit@gmail.com** மூலமாக பெற்றுக்கொள்ள முடிவதுடன், பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வேளை நாட்களில் **2026.04.22 ஆம் திகதி முதல் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணிவரையான காலப்பகுதியில் **17வது மாடி சுஹுருபாய, பத்தரமுல்ல, இலங்கை எனும் முகவரியில் காணப்படும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில்** அல்லது **(www.pubsec.gov.lk)** எனும் எமது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.

04. தகுதியான அனைத்து மனுதாரர்களும் பொருட்களை வழங்குவதற்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். மனுதாரர் தனது நிறுவனத்தை வணிகமாக பதிவு செய்திருக்க வேண்டும், மேலும் உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பெருமதி **ரூ.05 மில்லியனுக்கும்** அதிகமாயின் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் **(Public Contract Act)** பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படும். மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது. மேலதிக விபரங்கள் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

05. பின்வரும் முகவரியில் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2026.04.22** ஆம் திகதியிலிருந்து முதல் பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப.09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை சமர்ப்பித்து இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்களால் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத ஆவணக்கட்டணத்தைச் செலுத்தி அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு மனுகோரல் விண்ணப்ப படிவம் ஒன்று மட்டுமே வழங்கப்படும்.

06. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்முதலுக்காக வெவ்வேறாக மனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்தந்த கொள்முதலுக்கான மனு ஆவணங்களை பிரதிகளுடன் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மனு ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னர் **17வது மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் நிதிப் பிரிவில்** வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் அல்லது மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமூகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் மணிக்கு மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை கட்டயாம் பெற்றிருத்தல் வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்ப்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

07. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலமானது மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணப்படும்.

08. அனைத்து மனுக்களும், மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியான மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

    i. இலங்கையில் இயங்கும் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியால் வழங்கப்பட்ட பிணையாக இருத்தல் வேண்டும்.

    ii. மனுப் பாதுகாப்புப் படிவம் மனு ஆவண தொகுப்பின் IV ஆம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள ஆவணத்தின்படி இருத்தல் வேண்டும்.

    iii. மனு பிணையானது செயளாலர்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு **"Secretary / Ministry of Public Security and Parliamentary Affairs"** எனும் பெயரில் இருத்தல் வேண்டும்.

09. ஒவ்வொரு கொள்முதலுக்கும் மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்தில் **பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, 17வது மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல, இலங்கை** எனும் முகவரியில் முன்மனுக் கூட்டம் நடைபெறும்.

10. அவ்வப்போது திருத்தப்படும் நிதி விதிமுறைகள மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.

11. மனு ஆவணங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள **mops.procurementunit@gmail.com** மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளவும் அல்லது **011 2 887 916** என்ற தொலைநகல் இலக்கத்திற்கு தேவையான மனு ஆவணங்கள் பற்றிய தகவலை அனுப்பவும் மற்றும் முன் அறிவிப்பை வழங்கியவுடன் வருகைத்தருமாறு தெரிவித்துக்கொள்கின்றோம்.

12. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**விலாசம் :-**

தலைமை நிதி அதிகாரி
17வது மாடி, "சுஹுருபாய",
பத்தரமுல்ல.

**தொலைப்பேசி இலக்கம் :-**

நேரடி அழைப்பு - 011-2887396
பெக்ஸ் - 011-2887636 / 2887916

**தலைவர்,**

**அமைச்சின் பெறுகை குழு,**

**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**18ஆம் மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல.**

**2026.04.22**